**பத்தேகம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 22 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பத்தேகம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வேன். |
| (ஆ) | வங்கியினால் சமர்பிக்கப்பட்டிருந்த மீதியை உறுதிப்படுத்தலின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்களின் மீதி ரூபா 7,771,135 தொகையாக இருந்த போதிலும், அதனை ரூபா 7,934,659 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 கணக்குகளின் மூலம் சரி செய்வேன். |
| (இ) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதிய நிலுவை பங்களிப்புத் தொகை மீதி ரூபா 6,440,016 தொகை எனினும், கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 3,891,494 தொகை என கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | பங்களிப்புத் தொகையை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஓய்வூதியத் திணைக்களத்தின் திருத்தப்பட்ட அறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் சரி செய்வேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 68,651,798 இற்கான வித்தியாசம் ஒன்று காட்டப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மை ஒன்று என்பதனால் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **பெறவேண்டிய கணக்கு** | | |
| முன்னைய ஆண்டுகள் தொடர்பாக ரூபா 43,655,577 தொகையான பெற வேண்டிய வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

#### தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 158,484,775 தொகைக்கான 04 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகள் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் விதியின் பிரகாரம் செயற்பட்டு சரி செய்வேன். |
| (ii) விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்காததுடன், பீஎஸ் 46 படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் விதியின் பிரகாரம் செயற்பட்டு சரி செய்வேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்பமிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட பின்னர் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | 06 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்தப் பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் தாமதம் இன்றி ஓட்ட அட்டவணைகளை சமர்ப்பிப்பேன். |

(இ) பொதுநிருவாக சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 14 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) 1992 ஆகஸ்ட் 19 திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 26/92 | சபைக்குச் சொந்தமான வாகனங்களில் அரச இலச்சினை பதிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,447,239 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,803,317 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 3,064,613 | 3,211,740 | 2,869,490 | 7,547,094 | 2,733,661 | 3,320,053 | 1,355,819 | 7,206,728 |
| வாடகை | 7,683,200 | 3,319,320 | 3,303,250 | 422,706 | 1,179,100 | 3,008,795 | 2,921,820 | 413,657 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,245,550 | 1,415,700 | 1,420,450 | - | 1,175,000 | 1,369,680 | 1,364,930 | 4,750 |
| | 11,993,363 | 7,946,760 | 7,593,190 | 7,969,800 | 5,087,761 | 7,698,528 | 5,642,569 | 7,625,135 |

**2.2.2 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| **வீதவரி** | | |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி வருமானம் ரூபா 7,528,161 தொகைக்கான உயர்ந்த பெறுமதியை கொண்டிருந்தது, | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,170,538 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 98,464,022 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. பிரதான செயலாளர் அலுவலகத்தின் பதிவுகளின் படி சபைக்குக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் முறையே ரூபா 2,292,511 மற்றும் ரூபா 1,321,123 தொகைகளாகும். | பிரதான செயலாளரின் தகவல்களின் படி கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | பிரதான செயலாளரின் தகவல்கள் தொடர்பாக இணக்கம் ஒன்று காணப்படவில்லை. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். | திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுன், எதிர்காலத்தில் திட்டம் அமுல்நடத்தப்படும். |

### (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| குப்பை முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையில் இருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருக்கவில்லை. | குப்பை அகற்றுவதற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் முறைப்பிரகாரம் குப்பை முகாமைத்துவம் ஒன்று மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். |

### (இ) நிறைவேற்றப்படாத செய்பணிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 ஆண்டின் போது நெறிமுறை அடிப்படை ஏற்பாடுகளின் கீழ் தகனசாலை ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 4,500,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை நிர்மாண, வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரிமையை சட்டரீதியாக உரித்தாக்கிய பின்னர் செயற்திட்டத்தை அமுல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகும் வரை செயற்திட்டத்தை செயற்படுத்த முடியாமல் உள்ளது. |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **வாகனப் பயன்பாடு** | | |
| சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் ஓட்ட நிலையில் காணப்படாததுடன் 02 டேலர்கள் துருப்பிடித்துக் காணப்பட்டது. | திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தை திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மிகை ஊழியர்கள் எண்ணிக்கை 15 ஆக காணப்பட்டதுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கை 07 ஆகும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைப்பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களுக்கான அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 25/2014 ற்கு பொருத்தமின்றி அமைய, பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்கள் 13 பேருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 3,114,331 தொகை செலவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சேவையின் தேவை நிமித்தம் சேர்க்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான 02 ஏக்கர் 14.4 பர்சஸ் பரப்பளவை கொண்ட லேல்வலவத்தை பன்வில காணியை உரித்தாக்குவதற்காக ரூபா 2,044,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரித்தாக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரிமையை சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்டநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |
| (ii) | மாகுருகொடவத்தை காணி வாராந்த சந்தை நிர்மாணித்தல், குப்பை செயற்தளமொன்று நிர்மாணித்தல் மற்றும் நகர மண்டபம் நிர்மாணித்தல் ஆகியவற்றிற்கான காணியை உரித்தாக்குவதற்காக ரூபா 500,000 தொகையொன்று காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணி உரித்தாக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரிமையை சட்டரீதியாக உரித்தாக்கிய பின்னர் செயற்திட்டத்தை அமுல்நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது வரை காணி உரித்தாக்க முடியாதுள்ளது. |

3.4.2 **விளைவாற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| (அ) திண்மக் கழிவுப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக ரூபா 156,455 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன், இதற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கட்டடமும் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | விளைவற்ற கட்டடங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) சபைக்குச் சொந்தமான ஹாடிமெக் வண்டி மற்றும் ஜே.சி.பி. இயந்திரம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

4. **கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | புதிதாக பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்படும். |